RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21s34

OPEN ACCESS

# பழமொழிகள் காட்டும் உளவியல் மெய்ப்பாடுகள்

செ. கனிமொழி [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620020 தமிழ்நாடு, இந்தியா.

# Psychological Truths in Proverbs

C. Kanimozhi [a, *]

[a] Department of Tamil, Jamal Mohamed College (Autonomus), Tiruchirappalli-620020, Tamil Nadu, India

* Corresponding Author:
kanimozhichella@gmail.com

Received: 08-03-2021
Revised: 14-08-2021
Accepted: 02-09-2021
Published: 30-10-2021

Check for updates

**ABSTRACT**

Internal and external appearance of human body are the manifestations of truth. Truths are the expressions of human mind. Our forefathers have told such truths through proverbs. Body and mind belong to particular psychological genre. The proverbs used in this article are collected while conducting field survey in Nagapattinam district. The psychological truths found in such proverbs are explained through this article.

**Keywords:** Human Mind, Proverbs, Expression, Survey

## முன்னுரை

மனித உடலில் தோன்றும் அக மற்றும் புறவெளிப்பாடுகள் மெய்ப்பாடுகள் ஆகும். மெய்ப்பாடுகள் மனித மனத்தின் வெளிப்பாடு ஆகும். இத்தகைய மெய்ப்பாடுகளைப் பழமொழியின் வழி நம் முன்னவர்கள் கூறியுள்ளார்கள். உடல் மற்றும் உள்ள வெளிப்பாடு ஏதாவது ஒரு வகையான உளவியல் வகையைச் சார்ந்தது ஆகும். இக்கட்டுரையில் பயன்படுத்தப்பட்டுள்ள பழமொழிகள் அனைத்தும் நாகப்பட்டின மாவட்டத்தில் கள ஆய்வின் வழி சேகரிக்கப்பட்டவையாகும். இத்தகைய பழமொழிகளில் காணப்படும் உளவியல் மெய்ப்பாடுகளை இக்கட்டுரையின் வழி கூறப்பட்டுள்ளது.

## மெய்ப்பாடுகளும் உளவியலும்

தொல்காப்பியர் கூறும் எண்வகை மெய்ப்பாடுகளும் உள்ளத்து உணர்வை வெளிப்படுத்துவன ஆகும். எண்ணங்களை வெளிப்படுத்தும் போது உடலில், முகத்தில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படும் அவற்றை நவரசம் என்று கூறுகின்றனர். உணர்வுகளின் பிரதிபலிப்பாக முகம் உள்ளது. இக்கருத்தை “அகத்தின் அழகு முத்தில் தெரியும்” என்ற பழமொழி தெரிவிக்கிறது (Informer, Rathinasundari, 2020). புறத்தோற்றத்தில் தோன்றும் வேறுபாடுகளை நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என எட்டு வகையாகக் கொண்டு எண்வகை மெய்ப்பாடுகளைக் கூறியுள்ளார் தொல்காப்பியர். இந்த எண்வகை மெய்ப்பாடுகளும் உளவியல் ரீதியில் முதுமொழியில் அடங்கியுள்ளன என்பதைக் காணும் வகையில் இங்கு ஆராயப்பட்டுள்ளது.

## நகை

நகை என்றால் மகிழ்வுஇ மகிழ்ச்சிஇ இன்பம் எனலாம். நாம் பிறரால் மகிழ்ச்சி அடைவது. பிறரை நாம் மகிழ்விப்பது. அது மட்டுமல்லாது மகிழ்ச்சியினால் நாம் இன்பம் அடைவதோடு நம்மைச் சுற்றியிருக்கும் அனைவரையும் மகிழ்ச்சியுடன் வைப்பது. சிரிப்பினால் உடலும்இ மனமும் உறுப்புகளின் செயல்பாடும் உற்சாகமடையும் மகிழ்வினை ஏற்படுத்தும் பழமொழிகளை நம் முன்னோர்கள் கூறி வைத்துள்ளனர். நகைச்சுவையாகப் பேசுவர்களின் அருகில் அவரின் பேச்சைக் கேட்க எப்போதும் ஒரு கூட்டம் இருந்து கொண்டே இருக்கும். நகைச்சுவைப் பழமொழிகள் மற்றவர்களை எளிதில் ஈர்க்கக் கூடியன. நகைச்சுவைப் பழமொழிகள் கேலி கிண்டல் செய்து பேச அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன.

"போன மச்சா திரும்பி வரார் பூமனத்தோட

இல்ல கோமணத்தோட"

திருமணமாகிச் சில நாட்களில் மனைவியைப் பிரிந்து வெளியூர்களுக்கு வேலைக்குச் செல்லும் ஆண்மகன் மனைவியின் பிரிவைத் தாங்காமல் ஓரிரு நாட்களில் வேலையை விட்டுவிட்டு ஊருக்குத் திரும்பி வந்து விடுவார் (Informer, Kamala, 2020). அந்த ஆண்மகனை அக்கம் பக்கத்திவுள்ள பெண்கள் கிண்டல் செய்து சிரிப்பதாக இப்பழமொழி அமைந்துள்ளது. நகைப்புப் பற்றிக் கூறும் இன்னொரு பழமொழியாவது,

"பொண்டுவளா பொண்டுவளா நண்டு கடிக்க

ஆம்பளயா ஆம்பளயா அல்லா வச்சி காப்பாத்த"

என்பதாகும். இஸ்லாமியர் திருமணத்தின் போது பெண்கள் ஆண்களையும் ஆண்கள் பெண்களையும் கேலி செய்து சிரிப்பதற்காக இம்முதுமொழியைப் பயன்படுத்துகின்றனர். இப்பழமொழியை நாகப்பட்டினம் மாவட்ட இஸ்லாமிய மக்கள் திருமண வீடுகளில் அதிகமாகப் பேசிச் சிரிப்பார்கள் (Informer, Rani, 2020).

"பழுத்த மட்டய பார்த்து பக்க மட்ட சிரிச்சுதா"

வயதானவர்களைப் பார்த்து சிறுபிள்ளைகள் சிரிப்பதாக இப்பழமொழியில் கூறப்பட்டுள்ளது. வயோதிகம் காரணமாக வேலைகள் செய்ய முடியாமல் தடுமாறும் போது சிறுவர்கள் ஏளனம் செய்து சிரிப்பார்கள். அப்போது முதியவர்கள் இச்சொலவடையைக் கூறுவார்கள். எள்ளல், இளமை, பேதமை, மடமை, சார்ந்த நகை என்ற மெய்ப்பாட்டினைப் பழமொழிகளில் காணமுடிகிறது எனலாம் (Informer, Rajamani, 2020).

## அழுகை

அழுகை என்பது துன்பம், வேதனை, ஆத்திரம் தோன்றும்போது உள்ளத்தில் இருந்து வெளிவருவது ஆகும். அழுகை என்னும் தலைப்பில் பல்வேறு பழமொழிகள் இவ்வியலில் கூறப்பட்டுள்ளன. எனினும் மெய்ப்பாடு

"இளிவே இழவே வருத்தம் அசைவே வறுமை என

விளிவு இல் கொள்கை அழுகை நான்கே" (Ilampuranar, 2005)

என்று தொல்காப்பியர் அழுகை தோன்றுவதற்கு கூறிய கருத்தின் அடிப்படையில் அழுகை பற்றிய பழமொழி பின்வருமாறு,

"ஆத்திரம் வந்தா அழுதிடனு

மூத்திரம் வந்தா பேஞ்சிடனு"

மன எழுச்சி அதிகமாகும் நிலையில் ஆத்திரம் உருவாகிறது. ஆத்திரத்தை அடக்கி வைக்கும் போது தீவிரமான மனஎழுச்சி உண்டாகிறது இதனால் மனவிரைப்புத் தோன்றி மன நோயாக மாறுகிறது. மன எழுச்சியை அழுகையாக வெளிப்படுத்தி விட்டால் மன நோய் வருவது குறைந்துவிடும். இதைத்தான் ஆத்திரம் வந்தால் அழுதிடனும் என்றும் உடலில் கழிவுகள் இருந்தால் உடலானது எதிர்வினைகளை வெளிப்படுத்தி ஊறுவிளைவிக்கும். உடலுக்குக் கழிவுகளை வெளியேற்ற வேண்டியது எவ்வளவு அவசியமோ அதுபோல உள்ளத்தில் உள்ள கழிவுகளை அழுகையாக வெளிப்படுத்தி விட வேண்டும். அழுது தீர்த்து விட்டால் மன எழுச்சி குறைந்து மனமானது அமைதி நிலையை அடையும் என அழுகை பற்றி இச்சொலவடை தெரிவிக்கிறது (Informer, Panchali, 2020).

## இளிவரல்

இளிவரல் தோன்றுவதற்குரிய காரணங்களாக தொல்காப்பியர் கூறுவதாவது

"மூப்பே பிணியே வருத்தம் மென்மையொடு

யாப்புற வந்த இளிவரல் நான்கே"

இழிவுபடுத்துதலை இளிவரல் என்கிறோம். நம்மை மற்றவர்கள் இழிவாகப் பேசும் போது மனமானது நொறுங்கி விடுகிறது. இயலாமையால் இளிவரல் ஏற்படுகிறது. இழிவுபடுத்தப்படும் போது மனச்சிதைவு உண்டாகின்றது. மனச்சிதைவினைப் பழமொழியாக வெளிப்படுத்துகின்றனர் (Ilampuranar, 2005).

"ஏழக்கி தகுந்த எள்ளுருண்ட

பணக்காரனுக்கு தகுந்த பவுனுருண்ட"

பொருளாதாரத்தில் குறைந்தவர்களை இழிவாகப் பேசும் போது அவர்களின் மன எழுச்சியானது அதிகமாகிறது (Informer, Ganagavalli, 2020). அப்போது தோன்றும் இயலாமையைக் கோபமாக வெளிப்படுத்திப் பேசுவார்கள். உன்னுடைய பொருளாதாரத்திற்கு ஏற்றாற் போல் நீ இருக்கிறாய். என்னுடைய பொருளாதாரத்திற்கு ஏற்றாற்போல் நான் உள்ளேன் என இழிவுபடுத்துபவர்களுக்குப் பதில் கூறுவதாக இப்பழமொழி அமைந்துள்ளது.

"புளியங்கா விக்க வந்தவ பூர்வீகத்த பேசுறா

கத்திரிக்கா விக்க வந்தவ காடெல்லா திரியுறா"

வசதி படைத்த ஆண்மகனுக்குத் திருமணம் செய்ய பெண் கிடைக்கவில்லை என்பதால் அவனின் தாய் வசதி குறைவான இடத்தில் பெண் பார்த்துத் திருமணம் செய்து வைக்கிறாள். திருமணம் முடிந்த பிறகு மருமகள் தன்னுடைய பொருளாதாரத்தை அனுபவிக்கும்போது மாமியாரின் மனதில் பொறாமை எண்ணம் தோன்றித் தன் மருமகளை இழிவுபடுத்துவதாக இப்பழமொழி கூறப்பட்டுள்ளது (Informer, Ambujam, 2020).

## மருட்கை

ஒன்றைப் பார்த்து வியப்பு மற்றும் ஆச்சரியம் தோன்றுவதே மருட்கை ஆகும். இயல்பினை மீறியோ அல்லது முரணாகவோ ஒரு செயல் நடைபெறும் பொழுது நம் உள்ளத்தின் ஓர் ஆச்சரியம் தானாகவே தோன்றிவிடுகிறது. நம் கண்கள் புருவத்தைச் சுருக்கிப் பார்ப்பதன் மூலமும்இ முக மாற்றத்தின் மூலமும் ஆச்சரியத்தைக் காணவும் வெளிப்படுத்தவும் இயலும். முகம் மற்றும் பார்வையில் தோன்றும் வியப்பைப் பழமொழிகளிலும் காணமுடியும்.

"கல்லுலயு நாருரிப்பா கள்ளி"

கல் கடினமாக இருக்கும். அதில் நார் உரிக்க முடியாது. ஆனால் இதிலேயும் நார் உரிக்கும் திறமை பெற்றவள் என வியப்பாகப் பெண்ணின் திறமையைக் கூறுவார்கள். இயற்கையின் முரணாகக் கூறப்பட்ட இப்பழமொழி மருட்கையைத் தோற்றுவிக்கிறது (Informer, Amutha, 2020).

"வெலமோருல வெண்ணெ யெடுப்பா"

மோரில் வெண்ணெய் முழுவதையும் எடுத்துவிட்டுத்தான் மோர் விற்பார்கள். இந்த விலைமோரில் வெண்ணெய் இருக்காது. ஆனால் இந்த மோரில் வெண்ணெய் எடுக்கும் திறமை பெற்றவள் எனப் பெண்ணின் திறமையை வியந்து கூறுவார்கள். இவ்வாறு பெண்ணின் செய்கை மருட்கையை உருவாக்குகிறது என்பதை இப்பழமொழி வாயிலாகக் காணமுடிகிறது (Informer, Mamangam, 2020).

## அச்சம்

பயம் என்ற உணர்வு நம்பிக்கையின்மை காரணமாக ஏற்படுகிறது. அச்ச உணர்வு ஒருவிதப் படபடப்பை உருவாக்குகிறது. பய உணர்வினைப் பழமொழிகள் பலவாறு உரைத்துள்ளன. அதிக அச்சமானது மனநோயின் உச்ச நிலையாக உள்ளது. மனநோயின் ஆரம்ப அறிகுறியாக முதலில் ஒருவருக்குள் அச்சமானது தோன்றுகிறது.

"ஆம்படயான்னு ஆசயாயிருக்கு அடிப்பான்னு பயமாயிருக்கு"

இப்பழமொழியில் பெண் தனது அச்ச உணர்வை வெளிப்படுத்துவதாக உள்ளது. கணவனின் மீது அன்பு இருந்தாலும் அடிப்பதனால் அவருடன் சேர்ந்து வாழ அச்சமாக உள்ளது என்று தனது பய உணர்வைப் பழமொழி வழியாகக் கூறுகிறாள் (Informer, Anchalaiammal, 2020).

"பொண்ணுக்கு பொழ நெனச்சா கண்ணுக்கு கள புழு"

சமூகத்திலுள்ள மக்களுக்கு அச்ச உணர்வை ஊட்டுவதாக இப் பழமொழி கூறப்பட்டுள்ளது. பெண்ணைக் கொடுமைப்படுத்தினாலும்இ பெண்களைத் தவறாகப் பேசி இழிவுபடுத்தினாலும் வயதான பிறகு கண் தெரியாமல் கஷ்டப்பட வேண்டும். தவறு செய்தால் தண்டனை என்ற அச்ச உணர்வை நம் முன்னோர்கள் முதுமொழி வழியாகக் கூறியுள்ளனர். என்பதைக் கள ஆய்வு வழி அறியமுடிகிறது (Informer, Ponnammal, 2020).

## பெருமிதம்

வெற்றியைக் கொண்டாடும் போதும் வெற்றி அடையும் போதும் மனதிற்குள் பெருமிதம் உண்டாகிறது. பெருமித உணர்வு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் ஏற்படுத்துகிறது. தன்னம்பிக்கையைத் துளிர்விடச் செய்கிறது. பெருமிதம் காரணமாக மகிழ்ச்சி ஏற்படுகிறது.

"கொண்டவனாள கோடி பெத்துக்கிச்சு

வந்தவனாள வருச பெத்துகிச்சு"

திருமணமாகிக் கணவன் வீட்டுக்குச் சென்ற பிறகு கணவர் வீட்டில் உள்ள மாமனார் மாமியார் இறந்தாலோ அல்லது கணவர் இறந்தாலோ பிறந்த வீட்டிலிருந்து கோடித்துணி என்று புதுத் துணி எடுத்து வருவார்கள் (Informer, Manju, 2020). இது\ பிறந்த வீட்டின் பெருமையை ஊரறியத் தெரிவிப்பதாக இருக்கும். அதேபோல் உடன் பிறந்த சகோதரர்கள, சகோதரிகளுக்குப் பொங்கல் மற்றும் தீபாவளி போன்ற பண்டிகைக் காலங்களில் வரிசை கொடுப்பது இந்தப் பகுதியின் வழக்கமாக உள்ளது. இதுவும் பிறந்த வீட்டின் பெருமையைப் புகுந்த வீட்டில் உள்ளவர்களுக்குத் தெரிவிப்பதாக அமையும். இப்பழமொழியில் பிறந்த வீட்டின் பெருமிதத்தை மற்றவர்களுக்குத் தெரிவித்துத் தானும் பெருமிதம் கொள்வதாக உள்ளது.

"ஆடு திருடுன கள்ளனுக்கு ஆக்கிவிட்ட கள்ளி"

பெண் தன்னைப் பற்றித் தனக்குத் தானே பெருமிதமாகக் கூறுகிறாள். ஆடு திருடி வரும் கள்ளனுடன் வாழ்வது மட்டுமல்லாது அவனுக்குச் சமைத்துக் கொடுக்கும் திறமையும் என்னிடம் உள்ளது எனப் பெருமையாகப் பேசுவதாக இப்பழமொழி கூறப்பட்டுள்ளது (Informer, Manimala, 2020).

## வெகுளி

வெறுக்கப்படுவதால் உண்டாவது வெகுளி. மனப் போராட்டத்தால் செயல்களில் வெறுப்புணர்வு உண்டாகும். சிலர் துன்பங்களால் வாழ்க்கையை வெறுத்துவிடுகின்றனர்.

வெகுளித் தோன்ற காரணமானவை எவை எவை என்பது குறித்து தொல்காப்பியர்

"உறுப்பறை குடிகோள் அலை கொலை என்ற

வெறுப்பின் வந்த வெகுளி நான்கே" (Ilampuranar, 2005)

என்ற கருத்தின் அடிப்படையில் அமைந்த பழமொழி

"பொண்ணா பொறந்த நா கல்லா சமஞ்சு இருக்கலா"

பெண்ணாகப் பிறந்து வாழ்வில் பல துன்பங்களை அனுபவித்த பெண், தன் பெண் பிறவியை வெறுத்துப் பெண்ணாகப் பிறந்ததற்கு நான் கல்லாகவே பிறந்திருக்கலாம் என வாழ்வின் வெறுப்பைக் கூறுவதாக இப்பழமொழி பேசப்படுகிறது (Informer, kanagam, 2020). மேலும்,

"சீல இல்லன்னு சித்தாத்தா வீட்டுக்கு போனாளா

அவ ஈச்சம் பாய கட்டிக்கிட்டு எதுக்க வந்து நின்னாளா"

என்னும் பழமொழியில், (சித்தாத்தா - அம்மாவின் தங்கை) ஆதரவற்ற பெண் வறுமையின் காரணமாகத் தன் இருப்பிடத்தை விட்டு உதவிகேட்டு உறவினர் வீட்டுக்குச் சென்றால் அங்கு அவர்கள் இன்னும் மோசமான வறுமையில் இருந்தார்களாம். வறுமையுடன் சென்ற பெண் வாழும் வாழ்க்கையை வெறுத்துத் தன் வேதனையை மேற்கண்ட சொலவடையாகக் கூறுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. வெறுப்பானது வாழ்வில் பல நிலைகளில் உண்டாகிறது என்பதை மேற்கண்ட பழமொழிகள் தெரிவிக்கின்றன (Informer, Manickam, 2020).

## உவகை

காதல் உணர்வால் உண்டாவது உவகை. அன்பின் மிகுதிதான் காதல். காதல் உணர்வு உவகையினைத் தோற்றுவிக்கிறது. காதல் உணர்வால் மனமானது உற்சாகத்தை அடைகிறது. நாளமில்லாச் சுரப்பிகள் தூண்டப்படுகின்றன. மனக்கிளர்ச்சி தோன்றுகிறது.

"அவரு வருவாருன்னு நா அலகு போல கொண்ட போட்டே

அவரு வரல அவரு தம்பிதா வந்தாரு"

தன் கணவர் வருவார் என நினைத்துக் காதலுடனும் உற்சாகத்துடனும் தன்னை அழகுபடுத்திக் கொண்டு காத்திருந்த பெண்ணுக்குக் கணவர் வரவில்லை என்றதும் காதல் ஏக்கத்தை கூறுவதாக இப்பழமொழி பேசப்படுகிறது (Informer, Suchila, 2020).

## முடிவுரை

இவ்வாறு எண் வகை மெய்ப்பாடுகளிலும் உளவியல் தன்மை பயின்று வந்துள்ளமை இப்பகுதியில் கூறப்பட்டுள்ளது. பழமொழியின் வாயிலாக மெய்ப்பாடுகளை உணர முடிகிறது. மெய்ப்பாடுகள் அனைத்தும் உளவியல் பண்பு கொண்டவைகளாகவே உள்ளன. மெய்ப்பாடுகளின் வழி மனிதனின் உள்ளத்து உணர்ச்சிகள் வெளிப்படுகின்றன மெய்ப்பாடுகளின் மூலம் ஒருவனது மனநிலையைத் தெளிவாக காணமுடிகிறது. இந்த அனைத்து மெய்ப்பாடுகளையும் வெளிக்கொணரும்

மனவெழுச்சியின் வெளிப்பாடாகப் பழமொழி திகழ்கிறது. பழமொழிக்குப் பல முகங்கள் உண்டு என்பதை மெய்ப்பாடுகளின் வாயிலாகக் காணமுடிகிறது.

## References


Ilampuranar, (2005) Tholkappiyam- Ilampuranar Urai, First Edition, Saradha pathippagam, Chennai, India.

Subramaniyan, S,V. (2010) Tholkappiyam Thelivurai, Manivasakar Pathippagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License